பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
29 05 2025 **THURSDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இயற்கை விவசாயத்தில் சிக்கிம் மாநிலம் முன்னோடியாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் மேலும் வலுவடைந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. பொதுமக்கள், தொழில் நிறுவனங்களுக்கான சேவைகளை எளிமைப்படுத்தி உடனுக்குடன் வழங்குவதற்கான எளிமை ஆளுமை திட்டத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

4. கர்நாடகா, கேரளா, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<<<

இயற்கை விவசாயத்தில் சிக்கிம் மாநிலம் முன்னோடியாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சிக்கிம் மாநிலம் உருவானதன் 50 ஆண்டுகள் நிறைவை ஒட்டி, கேங்டாக்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பங்கேற்ற அவர், பொன்விழா நினைவு நாணயம் மற்றும் தபால்தலையை வெளியிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், நாட்டின் முதலாவது இயற்கை மீன்வளர்ப்பு பண்ணையை மத்திய அரசு சிக்கிமில் அமைத்து வருவதை சுட்டிக்காட்டினார்.

இந்தப் பண்ணை, இம்மாநில இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள சுற்றுலா தலங்களை சர்வதேச தரத்திற்கு இணையாக மேம்படுத்த வேண்டும் என்று நித்தி ஆயோக் கூட்டத்தில் தாம் வலியுறுத்தியதை குறிப்பிட்ட பிரதமர், சிக்கிம் மாநிலம், உலகளாவிய சுற்றுலா தலமாக உருவெடுக்கும் தருணம் வந்துள்ளதாக தெரிவித்தார்.

சாகசம் மற்றும் விளையாட்டுச் சுற்றுலாவிற்கு இம்மாநிலத்தில் அதிக வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

இம்மாநிலத்தின் சிறப்புகளை உலக நாடுகள் அறிந்து கொள்ளும் வகையிலேயே, ஜி.20 மாநாட்டு நிகழ்ச்சிகள் கேங்டாக்கில்ந நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலா என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி, நாட்டின் பன்முகத் தன்மையை கொண்டாடும் வகையிலும் அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் ஒட்டு மொத்த மனிதகுலம் மற்றும் சகோதரத்துவத்தின் மீதான தாக்குதல் என்பதோடு, இந்த தாக்குதல் நாட்டில் உள்ள பல்வேறு குடும்பத்தினரின் மகிழ்ச்சியை பறித்துச் சென்றுவிட்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் மூலம் உற்பத்திக்கான இந்தியா இயக்கம் மேலும் வலுவடைந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு மாநாட்டில் பேசிய அவர், ஐந்தாம் தலைமுறை போர் விமானங்களை உள்நாட்டிலேயே தயாரிக்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பது நமது பாதுகாப்புப் படைகளின் வலிமையை மேலும் அதிகரிக்கச் செய்யும் என்றார்.

பாதுகாப்புத் துறையில் சுயசார்பை ஊக்குவிக்கும் வகையில் அதிநவீன நடுத்தர ரக போர்விமானங்களை உள்நாட்டிலேயே தயாரிக்க இருதினங்களுக்கு முன் அனுமதி அளிக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த முடிவு உறுதியான மற்றும் ஆக்கபூர்வமானது என்பதோடு, நாட்டின் விண்வெளித் துறை புதிய உச்சத்தை எட்டுவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய காலகட்டத்தில் நாட்டின் வலிமை, அதன் உள்நாட்டு உற்பத்தி, முதலீடு மற்றும் ஏற்றுமதியால் மட்டுமின்றி, நாட்டின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அடிப்படையிலும் மதிப்பிடப்படுவதாக அமைச்சர் கூறினார்.

இத்தகைய நம்பிக்கை தேச பாதுகாப்புடன் இணைந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்குவதில் தொழில்துறையினர் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் எனவும் திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<<<

சர்வதேச ஐ.நா. அமைதிப் படை வீரர்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, அமைதி காக்கும் பணியின் போது உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

புதுதில்லியில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் ராணுவ துணைத்தளபதி லெப்டினென்ட் ஜென்ரல் ராகேஷ் கபூர் உள்ளிட்ட ராணுவ உயரதிகாரிகள் மற்றும் ஐ.நா அமைதிப் படை வீரர்கள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தப் படையில் பணியாற்றும் வீரர்களின் தியாகம் மற்றும் துணிச்சலுக்கு தலைவணங்குவதாக தெரவித்துள்ளார்.

இந்த வீரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் உலக அமைதிக்கான பங்களிப்பை பாராட்டுவதாகவும் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<<<

ஜம்மு காஷ்மீரின் சோஃபியான் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் இரண்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

இம்மாவட்டத்திற்கு உட்பட்ட **Bakuchan Imam Sahib** பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், ராணுவம், காவல்துறை மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படையினர் அப்பகுதியில் கூட்டாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது துப்பாக்கிகள், தோட்டாக்கள், கையெறி குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<<<

பொதுமக்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் அரசால் வழங்கப்படும் சேவைகளுக்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தி உடனுக்குடன் வழங்குவதற்கான எளிமை ஆளுமை திட்டத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேளாண் துறையின் உழவரைத் தேடி திட்டத்தை தொடங்கி வைத்த அவர், செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு பகுதியில் 525 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் அமையவுள்ள பன்னாட்டு மாநாட்டு மையத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

மேலும், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் சுமார் 260 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகளை தொடங்கி வைத்த முதலமைச்சர், சுமார் 700 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

>>>>>><<<<<<<<

மத்திய அரசின் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் சேர்க்கை தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேஷ் 30 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<<<

நாட்டின் வடகிழக்குப் பகுதி, கடலோர கர்நாடகா, கேரளா, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஒடிசா, தெலங்கானா, மேற்குவங்கத்தில் கனமழை பெய்யும் என்று தெரிவித்துள்ள அந்த மையம், பீகார், உத்ராகண்ட், சத்திஷ்கட், ஜார்க்கண்ட், மத்தியப்பிரதேசத்திலும் மழைக்கு வாய்ப்புள்ளதாக கூறியுள்ளது.

இதனிடையே, மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜ்குமார் 43 செகண்ட்ஸ்)

நீலகிரி மாவட்டம், உதகை - கல்லட்டி மலைப்பாதையில் மழை காரணமாக மரங்கள் வேரோடு முறிந்து விழுந்ததால், உதகை – கூடலூர் இடையே போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<<

அமெரிக்க அதிபரின் ஆலோசகர் பொறுப்பிலிருந்து விலகுவதாக பிரபல தொழிலதிபர் திரு. எலன் மஸ்க் அறிவித்துள்ளார்.

தமது சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்தப் பொறுப்பில் பணியாற்ற தமக்கு வாய்ப்பளித்ததற்காக அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பிற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அரசு பணிகளை திறம்பட செயல்படுத்துவது, அரசு நடைமுறையில் ஒரு அம்சமாக இருக்க வேண்டும் என்றும் திரு. எலன் மஸ்க் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<<<

மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 19-21, 21-16, 21-19 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Gutama - Isfahani** இணையை வென்றது.

>>>>>><<<<<<<<

நார்வே செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy** முதலிடத்தில் உள்ளார்.

மூன்றாவது சுற்று முடிவில் அவர் ஆறு புள்ளிகளை பெற்றுள்ளார்.

>>>>>><<<<<<<<

இத்தாலியில் நடைபெற்று வரும் பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் ராகேஷ் குமார், **Dhanna Ram Godara** ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ரோமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டங்களில் ராகேஷ் குமார், ஆஸ்திரேலியாவின்

**Jonathan Milne –**யையும், **Dhanna Ram Godara,** தென்கொரியாவின் **Geonhi Kwak –**ஐயும் வென்றனர்.

**>>>>>><<<<<<<**

தாஷ்கண்ட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Maan Kesharwani – Adharwa Sharma** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>>END<<<<<<<**